# வ்யாஸாசலீய
# சங்கரவிஜயம்

போலகம் சாஸ்த்ரரத்னாகர
ஸ்ரீராம சாஸ்திரிகள்

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம் வெளியீடு—3

## வ்யாஸாசலீய

# சங்கரவிஜயம்

போலகம் சாஸ்திரரத்னகர
ஸ்ரீராம சாஸ்திரிகள்

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம் வெளியீடு
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை - 1
1961

முதற் பதிப்பு: *1961*

பதிப்புரிமைப் பெற்றது

விலை ; [redacted] ந. பை.
50

லிபர்ட்டி அச்சகம், சென்னை - 1

# வ்யாஸாசலீய சங்கரவிஜயம்

வ்யாஸாசலீய சங்கரவிஜயம் என்பது வ்யாஸாசலர் என்ற யதி ச்ரேஷ்டர் இயற்றியது. இதில் 12-ஸர்க்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஸர்க்க முடிவிலும் அந்த அந்த ஸர்க்கத்தில் சொன்ன விஷயங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுவதுடன், 'இது வ்யாஸாசலர் இயற்றியது' என்று தமது பெயரையும் கவி இதில் குறிப்பிடுகிறார். வ்யாஸசைலமுனி, வ்யாஸகிரி, வ்யாஸாத்ரி, வ்யாஸாசலர் என்று தம் பெயரைப் பலவிதமாகக் குறிப்பிடும்போது, தீர்த்த, ஆச்ரம முதலிய ஸந்நியாஸிகளுக்குரிய பத்துவித நாமதேயங்களில் உள்ள கிரி முதலிய சொற்களை வழங்குவதனாலும், முனி என்று கூறுவதனாலும், இவர் ஸந்நியாஸி என்று தெரிகிறது. இவருடைய காவ்யத்தில் சொற்சுவையும் பொருள்சுவையும் நிரம்பியிருக்கின்றன.

இதனால்தான், மாதவீயம் என்று கருதப்படுகிற சங்கரவிஜயத்தை எழுதிய நவகாளிதாஸர் என்ற நவீன கவி, தமது சங்கரவிஜய காவ்யத்தில், **'धन्यो व्यासाचलकविवरस्तत्कृतिज्ञाश्च धन्याः'** (*1–17*) என்று வ்யாஸாசலீயத்தை வியந்து கூறுகிறார். வ்யாஸாசலீயத்திலிருந்து 500-க்கு மேற்பட்ட ரஸமான ச்லோகங்களைத் தமது காவ்யத்தில் பல இடங்களில் அப்படியே எழுதியிருக்கிறார். **प्राक्कविहृद्यपद्येष्वेषापि मत्पद्यनिवेशभङ्गी** (*1-3*) என்ற தமது ச்லோகத்

தில், 'வ்யாஸாசலர், ராமபத்திர தீக்ஷிதர், ராஜசூடாமணி தீக்ஷிதர், ஆனந்தகிரி, ஜகந்நாத கவி, உமாமஹேச்வர சாஸ்திரிகள் முதலிய பழைய கவிகளுடைய அழகான பத்யங்களைப் பல இடங்களில் ஸந்தர்பாநுகுணமாகச் சேர்த்து, அவற்றின் நடுவில் ஸாதாரணமான என் ச்லோகங்களையும் சேர்ப்பதே எனது அலாதியான ஓர் அமைப்பு முறை' என்று அதையே பெருமையாகக் கூறுகிறார்.

சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்த ஓரியண்டல் மானுஸ்கிருப்ட் லைப்ரரியிலுள்ள மாதவீயசங்கரவிஜயத்தின் பழைய கையெழுத்து ப்ரதியின் ஆரம்பத்தில் மாதவீய சங்கரவிஜயகாரருடைய இரண்டு ச்லோகங்கள் உள்ளன. '**व्यासाचलप्रमुखपूर्विकपण्डितक्ष्माभृत्**', '**यत्नादुदल्पधिषणास्तृणिना**' என்ற இந்த இரண்டு ச்லோகங்களில், வ்யாஸாசலர் முதலிய முன்பண்டிதர்களின் காவ்யத்திலுள்ள ச்லோகங்களைக் கூடியவரையில் க்ரஹித்தே தாம் ஸங்க்ஷேபசங்கரவிஜயம் எழுதுவதாக மாதவீயகாரரே கூறியிருக்கிறார். இந்த விஷயத்தை காமகோடி ப்ரதீபம் முதல் மலர், இரண்டாவது இதழில், 'மாதவீயசங்கரவிஜயம்' என்ற வ்யாஸத்தில் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறோம்.

மாதவீயம் பல இடங்களில் கொண்டாடி அநுவதித்துள்ள இந்தப் பழைய அழகான வ்யாஸாசலீய சங்கரவிஜய காவியத்தை, வ்யாஸாசலர் என்ற மஹாகவி,

कालट्याख्ये ग्रामवर्ये द्विजाग्र्यः सत्सन्तोषी केरलेष्वातिथेयः ।
जज्ञे कर्ता कर्मणां चोदितानां त्यक्ता नित्यं निन्दितानां विनीतः ॥

என்ற முதல் ச்லோகத்தினால், காலடியில் இருந்த சிவகுரு என்ற ஆசார்யருடைய பிதாவின் சரித்திரமாகிய

வஸ்துநிர்தேசரூபமான மங்களத்தைச் செய்துகொண்டு, 'अस्त्युत्तरस्यां दिशि देवतात्मा हिमालयो नाम नगाधिराजः' என்று மஹாகவி காளிதாஸன் வஸ்துநிர்தேசரூபமான மங்களத்தைச் செய்துகொண்டு குமாரஸம்பவகாவ்யத்தை ஆரம்பித்தது போல் ஆரம்பிக்கிறார்.

स ब्रह्मचारी गुरुगेहवासी तत्कार्यकारी विहितान्नभोजी ।
सायं प्रभातं च हुताशसेवी व्रतेन वेदं निजमध्यगीष्ट ॥ (1–2)

என்பது வ்யாஸாசலீயத்தில் இரண்டாவது ச்லோகம். இது சிவகுரு, குருகுலத்தில் வித்யாப்யாஸம் செய்த வரலாற்றைச் சொல்லுகிறது. வ்யாஸாசலீயத்தில் மேற் குறிப்பிட்ட முதல் ச்லோகத்தை மட்டும் விடுத்து, மேற் குறிப்பிட்ட இரண்டாவது ச்லோகம் முதல்,

इतीरिते प्राह तदीयभार्या शिवाख्यकल्पद्रुममाश्रयावः ।
तत्सेवनातो भविताऽद्य नाथ फलं स्थिरं जङ्गमरूपमैशम् ॥ (1-42)

என்ற முதல் ஸர்க்கம் 42-ஆம் ச்லோகம் வரை ஒன்று விடாமல் 41-ச்லோகங்களையும் வரிசையாக, மாதவீயம் 2-ஆம் ஸர்க்கம் 6-ஆம் ச்லோகம் முதல் 46-ஆம் ச்லோகம் வரையிலுள்ள 41 ச்லோகங்களாக அமைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு முந்திய ச்லோகங்கள் எல்லாம் மாதவீயகாரருடையனவே. 'इतीरिते' என்ற வ்யாஸாசலீய ச்லோகத்துக்கு, "ஓ நாதனே, பரமேசுவரனை நாம் பஜிப்போம். அவரை பஜித்தால் நமது இஷ்டமான புத்ரலாபம் கிடைக்கும் என்று ஆர்யாம்பாள் தன் நாதனிடம் கூறுகிறாள்" என்று பொருள். 'यत्राभाणि गुरोस्तु

4

वेदपठनम्' என்பது வ்யாஸாசலீயம் முதல் ஸர்க்கத்தில் கடைசி ச்லோகம். இதில் முதல் ஸர்க்கத்தில் கூறிய கதையின் ஸங்க்ரஹம் சொல்லப்பெறுகிறது.

நாம் பரமேசுவரனை உபாஸித்தால் நமது இஷ்டம் கைகூடும் என்பதற்கு ஸாதகமாக, உபமன்யு பரமசிவனைக் குறித்துத் தவம் செய்து அவரது அநுக்ரஹத்தைப் பெற்ற வரலாற்றை ஆர்யாம்பாள் தன் நாதனை சிவகுருவினிடம் கூறியதாக, 2-3 ஆகிய இரண்டு ஸர்க்கங்களின் கதையை வ்யாஸாசலீய கவி அமைத்திருக்கிறார். பிறகு வ்யாஸாசலீயத்தில் நான்காவது ஸர்க்கம்.

एवं फलप्रदमनीश्वरमीश्वराणामीशं भजाव कमितस्सकलार्थसिद्ध्यै ।
तत्रोपमन्युमहिमा परमं प्रमाणं नो देवतासु जडिमा जडिमा मनुष्ये ॥

என்ற முதல் ச்லோகத்தில், 'உபமன்யுவுக்குப் பரமேசுவரனை ஆராதித்து இஷ்டம் கிடைத்ததே, நமக்கும் கிடைக்குமென்பதற்கு ப்ரமாணம். ஆகையால் நாம் பரமேசுவரனை பஜிப்போம்' என்று ஆர்யாம்பாள் சிவகுருவினிடம் தன் தீர்மானத்தைக் கூறுவதாகக் கதை தொடங்குகிறது.

வ்யாஸாசலீயத்தில் இரண்டாம் ஸர்க்கத்தில் 221 ச்லோகங்கள், மூன்றாம் ஸர்க்கத்தில் 117-ச்லோகங்கள், ஆக 338-ச்லோகங்களால் விஸ்தாரமாக விவரித்த உபமன்யு சரித்திர பாகத்தை விடுத்து வ்யாஸாசலீயத்தில் நான்காவது ஸர்க்கத்தின் முதல் ச்லோகமாகிய 'एवं फलप्रदम्' என்ற மேற்கூறிய ச்லோகத்தை மட்டும்,

भक्तेप्सितार्थपरिकल्पनकल्पवृक्षं देवं भजाव कमितस्सकलार्थसिद्ध्यै ।
तत्रोपमन्युमहिमा परमं प्रमाणं नो देवतासु जडिमा जडिमा मनुष्ये ॥
(2—47)

என்று முதல் பாதத்தில் கொஞ்சம் மாற்றிக்கொண்டு மாதவீயம் அநுவதிக்கிறது.

பிறகு,

एवं कलत्रवचनं स निशम्य भक्त्या संपूजनाय गिरिशस्य मनो दधार ।
सा तस्य दुश्चरतपश्चरणोद्यतस्य तत्रानुकूल्यमकरोद्गृहवाटिकायाम् ॥
(4—2)

'இவ்விதம் ஆர்யாம்பிகையின் வார்த்தையைக் கேட்டுச் சிவகுரு பரமேசுவரனைப் பூஜிக்க விரும்பினர். ஆர்யாம்பிகை அவருடைய பூஜைக்கு உதவியாக இருந்தாள்' என்ற பொருளுடைய வ்யாஸாசலீய ச்லோகத்தின் கருத்தையே,

इत्थं कलत्रोक्तिमनुत्तमां स श्रुत्वा सुतार्थी प्रणतैकवश्यम् ।
इयेष सन्तोषयितुं तपोभिः सोमार्धमूर्धानमुमार्धमीशम् ॥ (2—48)

என்ற ச்லோகத்தால் மாதவீயகாரர் அநுவதித்துவிட்டு, '**तस्योपधाम किल संनिहितापगेका**' (4-3) என்பது முதல், '**मानुष्यधर्ममनुसृत्य मयैतदुक्तम्**' (4-19) என்பது வரையிலுள்ள வ்யாஸாசலீயத்தின் 17 ச்லோகங்களையே மாதவீயத்தில், ச்லோகங்களின் வரிசையைக் கொஞ்சம் மாற்றி, 2-49-முதல் 2-65-வரையிலுள்ள ச்லோகங்களாக அமைத்திருக்கிறார்.

பின்பு, அப்பய்ய தீக்ஷிதரின் மைத்துனரான ராஜசூடாமணி தீக்ஷிதர் இயற்றிய சங்கராப்யுதயத்தில் முதல் ஸர்க்கத்திலுள்ள,

खिद्यमानापि नर्मोक्तौ किंच मञ्चाधिरोहणे ।
विजित्यान्यानसावैच्छद्विद्यासिंहासनस्थितिम् ॥ (1—21)

समानापि ससत्वानां विषयेषु विरागिता ।
सुदृशोऽजनि गर्भस्थसुतचारित्रशंसिनी ॥ (1—22)

शुचिस्मितायाश्शुशुभे रुचिरा रोमवल्लरी ।
वेणुर्नव इव न्यस्तो वेधसास्य शिशोः कृते ॥ (1—23)

पयोधरमिषात्तन्व्याः पयःपानोचितौ शिशोः ।
कलशावमृतापूर्णौ कलयामास कंजभूः ॥ (1—24)

द्वैतवादं कुचद्वंद्वे मध्ये माध्यमिकं मतम् ।
गर्भस्थ एव पृथुको गर्हयामास सुभ्रुवः ॥ (1—25)

என்ற 5 ச்லோகங்களின் கருத்தையே கொஞ்சங்கூட மாற்ருமல், வேறு விருத்தத்தில் '**नर्मोक्तिकृत्यामपि खिद्यमाना**' (2-66) என்பது முதல் '**द्वैतप्रवादं कुचकुंभमध्ये**' (2-70) என்பது வரையிலுள்ள ச்லோகங்களால் நடுவில் மாதவீய காரர் அநுவதித்திருக்கிருர்.

மறுபடி வ்யாஸாசலீயத்திலுள்ள '**लग्ने शुभे शुभयुते**' (4-20) என்பது முதலிய 5-ச்லோகங்களை அப்படியே அநுவதித்துவிட்டு,

दिग्भिः प्रसेदे पवनैर्दिव्यगन्धैरभूयत ।
प्रदक्षिणीभवज्ज्वालैर्जज्वले ज्वलनैरपि ॥ (1—27)

என்ற சங்கராப்யுதய ச்லோகத்தின் பொருளை,

सर्वाभिराशाभिरलं प्रसेदे वातैरभाव्यद्भुतदिव्यगन्धैः ।
प्रजज्वलेऽपि ज्वलनैस्तदानीं प्रदक्षिणीभूतविचित्रकीलैः ॥
(2—76)

என்று மாதவீயம் வ்ருத்தபேதப்படுத்தி அநுவதிக்கிறது.

பிறகு, மாதவீயகாரர் சொந்தமான தமது இரு ச்லோகங்களைக் கூறிவிட்டு, மறுபடி வ்யாஸாசலீயத்தி லுள்ள 6-ச்லோகங்களைக் கூறிவிட்டு, அப்புறம் சங்கராப் யுதயத்திலுள்ள 3-ச்லோகங்களின் பொருளை அப்படியே வேறு விருத்தங்களுள்ள ச்லோகங்களால் அநுவதிக்கிறார்.

இவ்விதம் வ்யாஸாசலீயத்திலுள்ள பல ச்லோகங்களை யும், சங்கராப்யுதயத்திலுள்ள சில ச்லோகங்களையும் அப் படியே அநுவதிப்பதோடு தமது ச்லோகங்களையும் நடுவில் சேர்த்தும், வ்யாஸாசலீயத்திலும் சங்கராப்யுதயத்திலுமுள்ள பல ச்லோகங்களைத் தமக்குத் தேவையில்லை என்பதால் விட்டுவிட்டும், அந்த அந்த ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு வ்யாஸாசலீயம், சங்கராப்யுதயம், பதஞ்சலி சரிதம் இவை களிலுள்ள பல ச்லோகங்களைப் பல இடங்களில் க்ரமத்தை விவக்ஷிக்காமல் மாற்றிக் கூறியும், பல இடங்களில் பதம், அர்த்தம், கருத்து இவைகளில் ஒற்றுமையுடனும், மாதவீய காரர் தமது காவ்யத்தை எழுதியிருக்கிறார். இவ்விஷயம் மேற்கூறிய எல்லா க்ரந்தங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நன்றாகத் தெரியும். விமர்சகர் இவ்விஷயத்தை நன்கு ஆராய்ச்சி பண்ணி இவ்வளவு ச்லோகங்கள் இந்த இந்த க்ரந்தங்களில் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கின்றன என்று ப்ரயத்னப்பட்டுக் கூறியிருக்கிறார். அது விஷயத்தில் அவரது சிரமத்தை நன்றியுடன் பாராட்டுகிறோம்.

வ்யாஸாசலீயத்தில் 10-11-ஆகிய இரண்டு ஸர்க்கங் களிலும் காவ்ய நடைக்கு அநுகுணமாக ருதுவர்ணனம், ஸூர்யோதய வர்ணனம் முதலியவை பல ச்லோகங்களில் வருகின்றன. இந்த ச்லோகங்களை யெல்லாம் மாதவீய காரர் விட்டுவிட்டார்.

இவ்விதம் பலவித மாறுதலகளுடன் வ்யாஸாசலீயத்தைப் பரமப்ரீதியுடன் பல இடங்களில் அநுஸரித்து க்ரந்தம் எழுதிய மாதவீயகாரரிடத்தில் பரமபக்தியுடனும், அவரால் பூஜிக்கப்பெறும் மஹாகவியான வ்யாஸாசலரிடத்தில் அவமரியாதையுடனும் ஒரு விமர்சகர் விமர்சனம் செய்திருக்கிறார். நமக்கு யார் பூஜ்யர்களோ அவர்களுக்கும் பூஜ்யர்களாக ஒரு பெரியவர் இருந்தால் அவர்களையும் நாம் பூஜிப்பதுதான் வழக்கம். பகவத்பாதர்கள்கூட, '**पूज्याभिपूज्यं परमगुरुममुं पादपातैर्नतोऽस्मि**' எனக்குப் பூஜ்யர்களான கோவிந்தபகவத்பாதர்களுக்கும் பூஜ்யராக விளங்கும் கௌடபாதாசார்யர் என்ற பரமகுருவை நான் நமஸ்கரிக்கிறேன்' என்று மாண்டுக்ய காரிகாபாஷ்யத்தில் கடைசியில் கூறியிருக்கிறார்கள். இவ்விதம் உண்மை இருக்க, நம் விமர்சகர் தமக்குப் பூஜ்யரான மாதவருக்கும் பூஜ்யராக விளங்கும் வ்யாஸாசலரை ஏன் அவமரியாதை செய்கிறார் என்று தெரியவில்லை.

மத்வ மத வித்வம்ஸனத்தின் மூலமான மத்வ தந்த்ர முகமர்தனம் என்ற க்ரந்தத்தில் '**गुरूणां नतिततिविषये स्वाप्रणम्यत्ववादः**' என்றும், மத்வமதவித்வம்ஸனம் என்னும் வ்யாக்யானத்தில், '**गुरूणां प्रणतिपरंपराविषये महापुरुषे तच्छिष्योदितस्वप्रणामानर्हत्ववादः**' என்றும் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரவர்கள் கூறியிருக்கிறார்கள். அதில் தம் குருவினால் வணக்கத்துடன் அநேக கோடி நமஸ்காரங்கள் செய்யப்பெறும் மஹாபுருஷன் தனக்கு நமஸ்கரிக்கத்தக்கவன் அன்று என்று சிஷ்யன் சொல்லும் வாதத்தை த்ருஷ்டாந்தமாகக் கூறியிருக்கிறார். அது போல் இருக்கிறது விமர்சகர் வ்யாஸாசலரை அவமரியாதையாகப் பேசுவது.

மாதவீயத்தில் புகழ்ந்து கூறப்பெறும் வ்யாஸாசலர் என்பவர் மாதவரே என்றும், மாதவீயகாரர் வித்யாரண்யரே என்றும் பலவிதமாக ப்ரமித்து, 'अवज्ञं कृत्वा कुचोद्यं करोति' என்ற ந்யாயத்தால் விமர்சகரால் சொல்லப்பட்ட வாதங்களெல்லாம் ஸரியானவையல்ல, ப்ரமாணங்களுக்குப் புறம்பானவை என்று காமகோடிப்ரதிபம் 1-ஆம் மலர், 2-ஆம் இதழ் 'மாதவீயசங்கரவிஜயம்' என்ற வ்யாஸத்தில் கூறியுள்ளோம்.

ப்ராசீன மஹாகவியான வ்யாஸாசலர் எழுதிய ச்லோகங்களையே முந்தியும் பிந்தியும் எழுதியும் நடுவில் வ்யாஸாசலீயத்திலுள்ள உபமன்யுசரித்ர ஸம்பந்தமுள்ள இரண்டு ஸர்க்கங்களை வேண்டாமென்று விட்டுவிட்டும் இவ்விதம் வ்யாஸாசலீயத்தை அநுஸரித்து எழுதப்பட்ட க்ரந்தமாக மாதவீயம் உண்மையில் இருக்கும்பொழுது, விமர்சகர் அதற்கு மாறுதலாக, 'மாதவீயத்தில் உள்ள ச்லோகங்களையே முந்தியும் பிந்தியும் எழுதி நடுவில் உபமன்யு சரித்ர ஸம்பந்தமுள்ள இரு ஸர்க்கங்களைப் புதிதாகக் கல்பித்து, யாரோ ஒருவர் வ்யாஸாசலீயம் என்ற பெயரால் க்ரந்தம் எழுதிவிட்டார். வ்யாஸாசலீயகாரர் மாதவீயத்திலிருந்து பல ச்லோகங்களைத் திருடியிருக்கிறார்' என்று எழுதுகிறார்.

மாதவீயம் எழுதிய நவகாளிதாஸர் என்ற கவியே தமது சங்கர விஜய காவ்யத்தில், 'நான் வ்யாஸாசலர் போன்ற பழைய கவிகளின் காவ்யத்திலிருந்து ச்லோகங்களை எடுத்தேனே தவிர, மற்றவர்கள் என் காவ்யத்திலிருந்து ச்லோகங்களைத் திருடவில்லை' என்று ஸ்பஷ்டமாக ஒப்புக்கொண்டிருப்பதனால், மாதவீயகாரரை ப்ரமாணமாக

மதிக்கும் விமர்சகர் அவருக்கு விரோதமாக, வ்யாஸாசலர் திருடிவிட்டார் என்று இனிமேல் சொல்லமாட்டார், முன்பு தாம் அப்படிச் சொன்னதுபற்றிப் பச்சாத்தாபப்படுவார் என்று நினைக்கிறேன்.

வ்யாஸாசலீயத்தில் காவ்யரீதியை அநுஸரித்து, பாரதாதிகளில் ப்ரதான கதாபாக மத்தியில் பல உபகதைகள், ருதுவர்ணனங்கள் முதலியவை இருப்பது போலவே, உபமன்யு சரித்திரம், ருதுவர்ணனம், ஸூர்யோதயாதி வர்ணனம் முதலியவை இருப்பது விமர்சகருக்குப் பிடிக்காமல் போனாலும் ஸஹ்ருதயர்களான காவ்ய ரஸிகர்களுக்குப் பிடிக்கும் என்பதில் ஐயமில்லை. அதனால் ப்ரதானமான சங்கரசரித்திரத்துக்கு யாதொரு பாதகமும் ஏற்படாது.

'சங்கர பகவத்பாதரின் மஹிமையைக் கொஞ்சமேனும் அறியக்கூடிய சக்தியில்லாத யாரோ பாமரன் இவ்விதம் கல்பித்திருக்கிறான்' என்ற விமர்சகரின் தீர்மானம் அவ்வளவு ஸரியாகத் தோன்றவில்லை. இன்னும் இதுபோலவே, விமர்சகரின் பலவிதமான தீர்மானங்கள் ஸாரமின்றி இருப்பதனால் அவற்றைப் பொருட்படுத்தாமல் விடுகிறோம்.

மாதவீயத்தில் வ்யாஸாசலரையும் அவரது காவ்யத்தையும் புகழ்ந்து விட்டுப் பிறகு, **'तत्रादिम उपोद्घातः'** என்பது முதலிய ச்லோகங்களால் மாதவீயத்திலேயே உள்ள 16-ஸர்க்கங்களின் கதாஸங்க்ரஹம் கூறப்படுகிறதே தவிர, வ்யாஸாசலீயத்தின் 12 ஸர்க்கங்களின் கதாஸங்க்ரஹம் கூறப்படவில்லை. இதை அறியாமல் விமர்சகர் தவறுதலாகப் புரிந்துகொண்டு, 'வ்யாஸாசலீயத்தில், 12 ஸர்க்கங்கள்தாமே இருக்கின்றன; 16 ஸர்க்கங்கள் இல்லையே?' என்று ஆக்ஷேபிப்பது பொருந்தாது.

இன்னுமொரு முக்கியமான விஷயத்தை இங்கே வாசகர்கள் கவனிக்க வேண்டுகிறோம். "மாதவரும் வ்யாஸாசல கவியும் ஒருவரே" என்பதை, குருரத்ன மாலிகா வ்யாக்யாதா ஆத்மபோதேந்த்ரரே, மாதவீயம் ஸர்க்கம் 6, ச்லோகம் 25 முதல் 49, 51, 52, ஆக 27 ச்லோகங்களை வ்யாஸாசலீயத்திலிருந்து தாம் எடுத்து எழுதுவதாகச் சொல்வதால் நன்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். காசி விச்வேச்வரர் சண்டாள ரூபத்துடன் ஸ்ரீ சங்கர பகவத்பாதர்முன் தோன்றின ஸம்பவத்தைக் குறிக்கும் இந்த ச்லோகங்கள் இப்பொழுது அச்சிட்டிருக்கும் வ்யாஸாசலீயத்தில் இல்லவே இல்லை" என்று விமர்சகர் கூறுகிறார்.

விமர்சகரின் வாக்கியத்துக்குக் கருத்து வருமாறு—காஞ்சி ஸ்ரீமடத்தின் குருபரம்பரையைக் கூறுவதான ஸதாசிவப்ரஹ்மேந்திரர் செய்த குரு ரத்தின மாலைக்கு ஆத்மபோதேந்த்ரர் செய்த ஸுஷமா என்னும் வ்யாக்யானத்தில், '**कुहनान्त्यजविश्वनाथसृष्टः**' என்ற 20-ஆம் ச்லோகத்துக்கு உரை செய்யும்பொழுது, '**विस्तृतमिदं व्यासाचलीये**' என்று ஆரம்பித்து,

सोऽन्त्यजं पथि निरीक्ष्य चतुर्भिर्भीषणैः श्वभिरनुद्रुतमारात् ।
गच्छ दूरमिति तं निजगाद प्रत्युवाच स च शंकरमेनम् ॥

என்பது முதல்,

एवमेनमनुगृह्य कृपावान् आगमैस्सह शिवोऽन्तरधत्त ।
विस्मितेन मनसा सह शिष्यैः शंकरोऽपि सुरसिन्धुमयासीत् ॥

என்பதுவரையிலுள்ள, சண்டாள ரூபமெடுத்து வந்த விச்வநாதனுக்கும் ஆசார்யருக்கும் நடந்த ஸம்வாதத்தைக் குறிக்கும் 27 ச்லோகங்கள் அநுவதிக்கப்படுகின்றன. இந்த ச்லோகங்கள் சென்னையில் ஸமீபத்தில் அச்சிடப்பட்ட வ்யாஸாசலீய புஸ்தகத்தில் காணவில்லை. ஆனால் மாதவீயத்தில் 6-ஆம் ஸர்க்கத்தில் 25-ஆம் ச்லோகம் முதல் 52-ஆம் ச்லோகம்வரை இதே ச்லோகங்கள் காண்கின்றன.

அதில் ஒரு விசேஷம். மாதவீயத்தில்,

भास्कराभिनवगुप्तपुरोगान् नीलकण्ठगुरुमण्डनमुख्यान् ।
पण्डितानथ विजित्य जगत्यां ख्यापयाद्वयमते परतत्त्वम् ॥ (6–50)

என்ற 50-ஆம் ச்லோகம், ஸுஷமா என்ற குருரத்னமாலா வ்யாக்யானத்தில் அநுவதிக்கப்படவில்லை. அந்த ச்லோகத்தை விட்டு, பாக்கியுள்ள 27 ச்லோகங்களே அநுவதிக்கப்படுகின்றன. இதிலிருந்து விமர்சகர், 'இந்த 27 ச்லோகங்கள் அச்சிட்ட வ்யாஸாசலீயத்தில் காணவில்லையே; மாதவீயத்தில்தானே காணப்படுகின்றன? அப்படியிருந்தும் வ்யாஸாசலீயத்தில் இருப்பதாக ஸுஷமாகாரர் கூறுகிறாரே. அது தப்பாக இருக்குமா? ஆகையால் ஸுஷமாகாரரே 'மாதவர்தான் வ்யாஸாசலர், மாதவீயமே வ்யாஸாசலீயம் என்று எண்ணுகிறார்' என்று ஊகிக்கிறார்.

அந்த விமர்சகருக்கு நாம் கூறுவது:—நாம் காமகோடி ப்ரதிபத்தில் பல தடவை கூறியபடி வ்யாஸாசலர் வேறு, மாதவீயகாரர் வேறு. வ்யாஸாசலீயமும் மாதவீயமும் ஒன்றன்று; வெவ்வேறு. ஸுஷமாகாரர் மாதவீயத்துக்கும்

மூலமான ப்ராசீனமான வ்யாஸாசலீயத்திலுள்ள 27 ச்லோகங்களைத்தான் கூறுகிறார்; மாதவீயத்திலுள்ளதைக் கூறவில்லை. மாதவீயத்திலிருந்து கூறுவதாக இருந்தால் 'भास्कराभिनवगुप्तपुरोगान्' என்ற, 6-50-ஆம் ச்லோகத்தையும் சேர்த்து 28 ச்லோகங்களைக் கூறியிருப்பார். அதை மாத்திரம் விட்டுவிட்டு, முன்பின் ச்லோகங்களை எடுத்திருக்கமாட்டார். மாதவீயத்தில் காண்கிற 'भास्कराभिनवगुप्त' என்ற ச்லோகத்தில் ஆசார்யரைப் பார்த்து விச்வேச்வரர், 'பாஸ்கரர், அபிநவ குப்தர், நீலகண்டர் முதலிய பண்டிதர்களை ஜயித்து அத்வைத மதத்தைப் புவியில் பிரசாரம் செய்' என்று கூறுகிறார். பாஸ்கரர், அபிநவகுப்தர், நீலகண்டர் முதலியவர்கள் ஆசார்யர் காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் இருந்தவர்கள் என்பதில் ஒருவருக்கும் ஸந்தேஹமில்லை. த்ரிகாலஞானியான விச்வேச்வரர் வரப்போகிறவர்களை முந்தியே ஜயிக்கும்படி அவர்களைப் பார்க்காத ஆசார்யரிடம் கூறமாட்டார். ஆகையால் இதுமாதிரி ப்ரமாண விருத்தமான கருத்துக்கள் கொண்ட ச்லோகங்கள் யாவும் மாதவீயகாரருடைய அஸாதாரண கல்பனைகள். வ்யாஸாசலர் போன்ற ப்ராமாணிகர்கள் இவ்விதம் கூறுவது வழக்கமில்லை.

மாதவீயகாரர் வ்யாஸாசலீயத்திலுள்ள பல ச்லோகங்களை அநுவதிக்கும்பொழுது நடுவில் இதுமாதிரியான தமது கல்பனா ச்லோகங்களையும் சேர்ப்பது வழக்கம். அநேக இடங்களில் அவ்விதம் அந்த க்ரந்தத்தில் பார்க்கலாம். இதை மாதவீயகாரரே 'प्राक्तविहृद्यपद्येष्वेपापि मत्पद्यनिवेशभङ्गी' என்று கூறுகிறார். ஆகையால் வ்யாஸாசலீயத்திலுள்ள 27 ச்லோகங்களையும் அவற்றின் நடுவில் முன்கூறியுள்ள தமது கல்பனா ச்லோகத்தையும் மாதவீயகாரர் தமது க்ரந்தத்தில் எழுதியிருக்கிறார்.

முந்திய வ்யாஸாசலர், மாதவீயமான கல்பனு ச்லோகம் தவிர 27 ச்லோகங்களை க்ரந்தத்தில் கூறியிருக்கிறுர். வ்யாஸாசலீயத்திலுள்ள மேற்படி ச்லோகங்களைத்தான் ஸுஷமாகாரர் அநுவதிக்கிறுர். வ்யாஸாசலீயத்தில் மேற்படி ச்லோகங்கள் இருப்பதாகவும் கூறுகிறுர். ஸுஷமாகாரர் வ்யாஸாசலீய புஸ்தகத்தில் பார்த்த இந்த 27 ச்லோகங்கள், அச்சிட்ட வ்யாஸாசலீயத்தில் காணப்படாமலிருப்பதற்குக் காரணம், அச்சிட்டதற்கு மூலமான ஏட்டு ப்ரதிகளில் அவை விடப்பட்டிருப்பதேயாகும். ஏட்டுப் பிரதிகள் எழுதுகிறவர்கள் நடுவில் க்ரந்தங்களை விட்டுவிட்டு எழுதுவது பல காரணங்களால் உண்டு. இதைப் பரிமளகாரரான அப்பய்ய தீக்ஷிதர் தமது பரிமளத்தில் கூறியிருக்கிறுர். 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்று பழமொழியும் உண்டு.

யார் யார் எந்த எந்தக் காலத்தில் இருந்தார்கள் என்பதையே சரியாக ப்ரமாணங்களால் அறியாமலோ, அறிந்தும் வேண்டுமென்றே, முன்பின் இருந்தவர்களை ஒரே காலத்தில் இருந்ததாக ஸ்தாபித்துக் கூறும் ஸ்வபாவமுள்ள மாதவீய சங்கரவிஜயகாரருடைய முன்கூறிய ச்லோகத்தை அநுஸரித்தே, சாத்தனூர் கல்யாணராம சாஸ்திரிகள் என்பவர், சிவரஹஸ்யத்திலுள்ள 9-ஆம் அம்சம் 16-ஆவது சங்கரப்ராதுர்பாவ அத்யாயத்தைத் தெலுங்கு லிபியில் சென்னையில் கி. பி. 1873-ஆம் வருஷத்தில் அச்சிட்ட பொழுது, பார்வதியைப் பார்த்துப் பரமேசுவரன் சொல்லும் வாக்கியங்களின் மத்தியில் ஆசார்யபாதர் பாஸ்கரர், நீலகண்டர் முதலியவர்களை ஜயித்தார் என்ற கருத்தையுடைய, 'तत्र स्थितान् भास्करभट्टमुख्यान् तं नीलकण्ठं च

तृणीकरिष्यन्' என்ற ச்லோகம் முதல் 13 ச்லோகங்களை தாமே கல்பித்து அவை ப்ராசீனமான சிவரஹஸ்ய க்ரந்தத்திலேயே இருப்பதாக உலகத்தில் எல்லாருக்கும் ப்ராந்தியை உண்டுபண்ண யத்தனித்துவிட்டார். இதை காமகோடி ப்ரதீபத்தில் 'சிவரஹஸ்யம்' என்ற வ்யாஸத்தில் (மலர் 1, இதழ் 3) விளக்கியுள்ளோம். 'த்ரிகாலஞானியான பரமேச்வரன் பார்வதிக்கு, பாஸ்கரர் நீலகண்டர் முதலியவர்களுடைய காலத்துக்கு வெகு காலம் முந்தியே இருந்து ஸித்தியடைந்துவிட்ட ஆசார்யர், பாஸ்கரரையும், நீலகண்டரையும் ஜயித்தார் என்று கூறுவது அடியோடு அஸம்பாவிதமான விஷயம் என்று யாரும் தெரிந்து கொள்ளக்கூடும். 'இது மாதிரி ச்லோகம் சிவரஹஸ்யத்தில் இருப்பதாக யாரும் நம்பமாட்டார்களே. நாம் அதிலிருப்பதாகக் கூசாமல் கூறுகிறோமே, அச்சும் போடுகிறோமே!' என்றுகூட நினைக்கவில்லை, சாத்தனூர் கல்யாணராம சாஸ்திரிகள். என்ன ஆச்சரியம்!

ஸ்ரீ கும்பகோண மடம் விமர்சகர் முன் கூறிய சாத்தனூர் கல்யாணராமசாஸ்திரிகளால் புதிதாகச் சேர்த்து அச்சடிக்கப்பட்ட முன்கூறிய அஸம்பாவித ச்லோகங்களை மனத்தில் வைத்துக்கொண்டு எழுதுகிறார்—'கும்பகோண மடம் சிவரஹஸ்யபாடத்தில் வெகு நாட்கள் முன்னமேயே அச்சிட்டிருக்கும் பாடத்திலிருக்கும் இருபது ச்லோகங்கள் காணவில்லை' என்று. சாத்தனூர் கல்யாணராமசாஸ்திரிகள் சிவரஹஸ்யம் சங்கரப்ராதுர்பாவாத்யாயத்தில் கடைசி ச்லோகத்திலுள்ள 'स काञ्च्यामथ सिद्धिमाप' என்ற வாக்கியத்துக்குப் பிறகு புதிதாகச்சேர்த்த (நாம் முன்பு மலர்-1 இதழ்-3 சிவரஹஸ்யம் என்ற வியாஸத்தில் காட்டிய)

13 ச்லோகங்கள் அதே அத்யாயத்தில் நடுவில் அவரால் சேர்த்து அச்சடிக்கப்பட்ட,

'दुर्वासश्शापतो भूमौ जातां वाणीं विजित्य ताम् ।
अगस्त्यचरिते देशे तुङ्गातीरे सुनिर्मले ॥
पुण्यक्षेत्रे द्विजवर स्थापयित्वा सुपूजय ।
यत्रास्ते ऋश्यश्रृङ्गस्य महर्षेराश्रमो महान् ॥
कलावपि ततोऽद्वैतमार्गः ख्यातो भविष्यति ।'

என்ற $2\frac{1}{2}$ ச்லோகங்கள் ஆக $15\frac{1}{2}$ ச்லோகங்கள்தாம் வெகு நாட்களுக்குமுன்னமேயே, அதாவது கி. பி. 1873-ஆம் வருஷத்தில் அச்சிட்டிருக்கும் பாடத்தில் இருக்கின்றன. விமர்சகர் சொல்லுகிறபடி 20-ச்லோகங்கள் இல்லை. இன்னும் ஏதாவது $4\frac{1}{2}$ ச்லோகங்கள் முக்கியமான சில விஷயத்தைக் கூறுவதற்காக அவசர வார்த்திகமாகக் கையிருப்பாக அவர் வைத்திருக்கிறாரா? அப்படிக் கையிருப்பில் வைத்திருந்தாலும் அவை அச்சுப் போட்டதில் சேரமாட்டா. கும்பகோணமடம் பழைய சிவரஹஸ்ய பாடத்தில், சாத்தனூரார் சேர்த்த $15\frac{1}{2}$ ச்லோகங்களும் விமர்சகர் கையிருப்பிலுள்ள $4\frac{1}{2}$ ச்லோகங்களும் சிவரஹஸ்யம் பழைய ஏட்டுப் புஸ்தகங்களில் இல்லாதவையானதால் காணப்படாதது ஆச்சரியமில்லை.

ஸமீபத்தில் 1958-ஆம் வருஷத்தில் திருநெல்வேலி ரிடயர்ட்டு வக்கீல் காகர்லா ஸுந்தரமய்யா என்பவரால் ஆங்கில பாஷையில் வெளியிடப்பட்ட 'ஸ்ரீ சிருங்கேரி சாரதாமடம்' என்ற விமர்ச நூலில் சாத்தனூர் கல்யாண

ராமசாஸ்திரிகளால் 1873-ஆவது வருஷத்தில் தெலுங்கு லிபியில் அச்சிட்டு வெளியிடப்பட்ட சிவரஹஸ்யம் சங்கர ப்ராதுர்பாவாத்யாயத்தில் கடைசியில் புதிதாகச் சேர்க்கப்பட்ட 13 ச்லோகங்களும் நடுவில் சேர்த்து அச்சடிக்கப்பட்ட $2\frac{1}{2}$ ச்லோகங்களும், ஆக $15\frac{1}{2}$ ச்லோகங்கள் அதிகமாகச் சிவரஹஸ்யத்தில் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்த $15\frac{1}{2}$ ச்லோகங்களும் சிவரஹஸ்யத்தில் இல்லாதவை; புதிதாகச் சேர்க்கப்பட்டவை என்று முன்பே கூறிவிட்டோம்.

இங்கு ஓர் விஷயம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். சாத்தனூரார் 1873-இல், 16-ஆம் அத்தியாயத்தில் பழைய புஸ்தகங்களில் கடைசியிலிருக்கும் '**स काञ्च्यामथ सिद्धिमाप**' என்ற பாகத்தை ஒப்புக்கொண்டு, பிறகு புதிதாக, '**काञ्च्यां तपस्सिद्धिमवाप्य दण्डी**' என்பது முதலிய 13 ச்லோகங்களைக் கடைசியில் சேர்த்து அச்சடித்தார். பிறகு, '**स काञ्च्यामथ सिद्धिमाप**' என்ற பாகத்துக்குப் பதிலாக '**ततो नैजमवाप लोकम्**' என்று மாற்றி அதிகப்படியான 13 ச்லோகங்களை எடுத்து விட்டார்கள், 1875-ஆம் வருஷத்தில் அதே புஸ்தகத்தை அச்சிட்டவர்கள்.

காகர்லா S. ஸுந்தரமய்யா என்பவர், '**ततो नैजमवाप लोकम्**' என்றே பாடத்தை வைத்துக்கொண்டு பிறகு 13 ச்லோகங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார். அந்தப் பாடப்படி ஆசார்யர் காஞ்சியில் 'மிச்ரர்கள்' என்பவர்களை ஜயித்துவிட்டுத் தமது கைலாஸ லோகம் போய் விட்டார்களென்று முடித்துவிட்ட பிறகு, அதிகப்படி 13 ச்லோகங்களில் கூறியபடி பூமியில் பல இடங்களில்

ஆசார்யர் யாத்திரை பண்ணினர் என்பது பொருந்துமா என்பதை விவேகிகள் கவனிக்க வேண்டும். ‘सिद्धि’ என்பது अभीष्टसिद्धि தான், விதேஹமுக்தியல்ல என்று பட்டஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் ஆசார்ய சரித்திர விமர்சன நூலில் இரண்டாம் பாகத்தில் கூறியதை உறுதியாக நினைக்கிற காகர்லா, ஏன் ‘स काञ्च्यामथ सिद्धिमाप’ என்ற சாத்தனாராரும் ஒப்புக்கொண்ட பாடத்தை மாற்றவேண்டும்? நாம் என்ன எழுதுகிறோம். அதற்கு அநுகூலமான பாடம் எது, ப்ரதிகூலமான பாடம் எது என்றுகூட அறியாதவர்களெல்லாரும் விமர்சனம் செய்கிறார்கள். அந்த விமர்சன நூல்களைப் பார்த்துச் சாதாரண ஜனங்கள் ஏமாந்துவிடக் கூடாதென்பதற்காகவே இந்த விஷயம் எழுதுகிறோம். எந்தவ்யக்தியினிடத்திலும் நமக்கு த்வேஷமில்லை. உண்மையை எவ்வளவு மறைத்தாலும் அது மறையாது. அது எப்படியோ, யாரைக் கொண்டோ, பிறகு வெளியாகிவிடுமென்று கவனிக்க வேண்டும்.

இன்னொரு முக்கிய விஷயம். பாகவதம், 10-ஆம் ஸ்கந்தம் 79-ஆம் அத்தியாயம் பலராமரின் தீர்த்தயாத்ரா நிரூபணவஸரத்தில் 14-ஆம் ச்லோகத்தில் த்ரவிட தேசத்திலுள்ள க்ஷேத்ர தீர்த்தங்களைக் கூறுகையில் இவ்வாறு உள்ளது—

‘कामकोष्णीं पुरीं काञ्चीं कावेरीं च सरिद्वराम्।’

என்று. இந்த ச்லோகத்தில் காஞ்சீபுரி என்ற க்ஷேத்ரத்தையும், காவேரி நதியையும் பலராமர் பார்த்து ஸேவித்தாரென்று கூறப்படுகிறது. பாகவத புஸ்தகத்தை அச்சுப்

போட்ட வடக்குத் தேசத்தார் 'कामकोष्णीं' என்று பதத்தைத் தப்பாக அச்சிட்டுவிட்டார்கள். அம்பாளுக்கு कामकोटि என்ற பெயர், லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தில் இருக்கிறது. காமகோடி என்ற காமாக்ஷி தேவியின் புரி காஞ்சி என்பது அதன் பொருள். ஸ்ரீவல்லபாசார்யரும் பாகவத வ்யாக்யானத்தில் அவ்விதமே பொருள் கூறுகிறார். 'कामकोटिपुरीं काञ्चीं' என்றுதான் தெலுங்கு லிபி, க்ரந்த லிபி, இரண்டிலும் அச்சுப்போட்ட பாகவத புஸ்தகங்களில் பாடம் இருக்கிறது. இதை அறியாமல் காகர்லாபோன்ற சிலர், அர்த்தமில்லாத அபத்தமான कामकोष्णीं என்ற பாடமே சரியானதென்றும், 'कामकोटि-पुरीं काञ्चीं என்ற பாடம் காமகோடி மடத்தைச் சேர்ந்தவர்கள் அச்சுப்போட்டது, சரியானதன்று என்றும் கூறுகிறார்கள். அவர்களுக்குச் சரியான ஆராய்ச்சியாளர்கள் பதில் கூறவேண்டும்.

நமது விமர்சகர் 'ஆசார்யாள் ஸ்தாபித்த ப்ரஸித்தமான த்வாரகை, புரீஜகந்நாதம், பதரீ மடங்களுக்கு ஏன் ஸ்படிக லிங்கங்கள் கொடுக்கவில்லையோ, தெரியவில்லை' என்று துக்கிக்கிறார். அந்தத் துக்கத்தைப் பரிஹரிப்பதற்காகவேபோல, சாத்தனூர் கல்யாணராம சாஸ்திரிகள் சிவரஹஸ்யத்தில் தம்மால் கல்பனை செய்து சேர்த்து அச்சடிக்கப்பட்ட ச்லோக வரிசையில், 'शिष्यान्निजगाद मोदात्। यूयं चतुर्दिक्षु मठेषु लिङ्गैस्साकं वसन्त्वित्युपदिश्य हर्षात्। विवेश पृष्ठं वृषभस्य' என்ற ச்லோகப் பகுதிகளையும் சேர்த்து, நான்கு மடங்களுக்கு நான்கு லிங்கங்களையும் பங்கிட்டுவிட்டார். ஐந்தாவது லிங்கத்தை எங்கு ஸ்தாபிக்க இஷ்டமோ கல்யாணராம சாஸ்திரிகளுக்குத் தெரியவில்லை.

விமர்சகர் இந்த விஷயத்தை விளக்க வேண்டும். ஒரு வேளை, 'आचार्याय द्विगुणं दद्यात् - குருவுக்கு இரண்டு மடங்கு கொடுக்க வேண்டும்' என்று கூறியிருப்பதால் தாம் குருபீடமாக மதித்த மடத்துக்கு இரண்டு ஸ்படிக லிங்கங் கள் இருக்கட்டுமென்று எண்ணியிருக்கலாம் கல்யாணராம சாஸ்திரிகள் என்று நினைக்கிறேன்.

ஆகவே மாதவீயகாரருடைய கல்பனாவிலாஸமான 'भास्कराभिनवगुप्तपुरोगान्' என்ற முன்கூறிய ச்லோகம் அவரை அநுசரித்து எழுதும் சாத்தனூராரால் வேறு ரூபத் தில், அதாவது तत्र स्थितान् भास्करभट्टमुख्यान् என்று கூறப் பட்ட ச்லோக வடிவமாகச் சிவரஹஸ்யத்திலும் ஏறிவிட்டது; ஆகையால் அந்த ச்லோகத்தைத் தவிர 27-ச்லோகங்கள் தாம் வ்யாஸாசலீயத்தில் உள்ளன. அதைப் பார்த்தே ஸுஷமாகாரர் வ்யாஸாசலீயத்தில் இருப்பதாக எழுதுகிறார். அச்சுப்போட்ட வ்யாஸாசலீயத்தில் சரியான மூலப்ரதி கிடைக்காததனால் அந்த 27-ச்லோகங்கள் விடப்பட்டு விட்டன. அந்த 27-ச்லோகங்களையும் அச்சிட்ட வ்யாஸா சலீய புத்தகத்தில் 4-ஆம் ஸர்க்கம் 'इत्युक्तवन्तं कृपया महात्मा...........श्रीदेशिकेन्द्रस्य सनन्दनाख्यम्।' என்ற 92-ஆம் ச்லோகத்துக்குப் பிறகு சேர்த்துக்கொள்ள வேண் டும். மறுபடி வ்யாஸாசலீயம் அச்சுப் போடும்பொழுது இதைக் கவனித்து அச்சுப் போடுவார்களென்று நம்பு கிறேன்.

இன்னுமொரு முக்கியமான விஷயத்தை வாசகர்கள் கவனிக்கவேண்டும். மேற்குறிப்பிட்ட 27-ச்லோகங்கள் வ்யாஸாசலீயத்தில் இருந்துங்கூட, வ்யாஸாசலீயத்தில்

இருப்பதாக ஸுஷமாகாரர் கூறியிருந்துங்கூட அச்சுப் போட்ட வ்யாஸாசலீய புஸ்தகத்தில் லேககர்களால் மூல ப்ரதியில் எழுதாது விடப்பட்டதனுல் காணப்படாமலிருப்பது போலவே வ்யாஸாசலீயத்தில் இருப்பதாக ஸுஷமாகாரர் கூறுகிற இன்னும் 5-ச்லோகங்கள் லேககர்களின் கவனக் குறைவால் மூலப்ரதியில் எழுதப்படாமலிருப்பதால் அச்சுப் புஸ்தகத்தில் காணப்படவில்லை. அது வருமாறு:—

குருரத்தினமாலையின் 33-ஆம் ச்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸுஷமாகாரர் இவ்விதம் கூறுகிருர் :—

— व्यासाचलीयेऽपि द्वादशसर्गे —

एवं निरुत्तरपदां स विधाय देवीं
सर्वज्ञपीठमधिरुह्य मठे स्वक्लृप्ते ।
मात्रा गिरामपि तथोपगतैश्च सिद्धैः
संभावितः कमपि कालमुवास काञ्च्याम् ॥ १ ॥

प्रागष्टमाद्विदितवेद्यमुदूढबाल्यं
सर्वज्ञसंज्ञमथ हंसितमात्मनैव ।
श्रीकामकोटिबिरुदे न्यदधात्स्वपीठे
गुप्तं स्वशिष्यतिलकेन सुरेश्वरेण ॥ २ ॥

इत्थं स शङ्करगुरुः कृतकृत्यभावात्
भावान्प्रकाश्य निगमान्तगिरां निगूढान् ।
काञ्च्यां विमुच्य वपुरादृतमिच्छयैव
स्वस्यैव धाम्नि परमे स्वत एव लिल्ये ॥ ३ ॥

गामाक्रम्य पदेऽधिकाङ्घ्रि निबिडं स्कन्धैश्चतुर्भिस्तदा
व्यावृण्वन्भुवनान्तरं परिहरंस्तापं समोहज्वरम् ।
यश्शाखी द्विजसंस्तुतः फलति तत्स्वाद्यं रसाख्यं फलं
तस्मै शङ्करपादपाय महते तन्मस्त्रिसन्ध्यं नमः ॥ ४ ॥
पीठे तिष्ठति कामकोटिबिरुदे यश्शारदाख्ये मठे
देहीवादिमशङ्करार्यनियमव्रातो व्रतिष्ठोऽधुना ।
नेपालादिनृपालमौलिविधृतश्रीशासनो नश्शिवं
देयादेष जगद्गुरुस्स विपुलानन्दाकृतिश्शङ्करः ॥ ५ ॥

என்று.

இந்த இடத்தில் ஒரு விஷயம் கவனிக்க வேண்டும். அச்சுப்போட்ட வ்யாஸாசலீயத்தில் காணப்படாமல் மாதவீயத்தில் காணப்படும் முன்கூறப்பட்ட 27-ச்லோகங்களை ஸுஷமாகாரர், வ்யாஸாசலீயத்தில் இருப்பதாகக் கூறுவதனுல், "மாதவரே வ்யாஸாசலர்" என்று ஸுஷமாகாரர் நினைக்கிருர் என்று விமர்சகர் கூறினுரே; அதே விமர்சகர் முன்கூறிய 5-ச்லோகங்களை அதே ஸுஷமாகாரர் வ்யாஸாசலீயத்தில் இருப்பதாகக் கூறுகிருரே, அவை மாதவீயத்தில் காணப்படவில்லையே. ஆகையால் மாதவர் வேறு, வ்யாஸாசலர் வேறு என்று ஸுஷமாகாரர் நினைக்கிருர் என்றும், அந்த 5-ச்லோகங்களும் அச்சிட்ட வ்யாஸாசலீயத்தில் காணப்படவில்லையாதலால் அந்த 5-ச்லோகங்கள் எழுதிய வ்யாஸாசலர் வேறு, அச்சிட்ட வ்யாஸாசலீயகாரரான வ்யாஸாசலர் வேறு. ஆக வ்யாஸாசலர்கள் இரண்டு பேர்கள் என்றும் ஏன் கூறக்கூடாது?

ஆகையால் விமர்சகருக்கு நாம் போதிப்பது என்ன வென்றால், மாதவர் வேறு, வ்யாஸாசலர் வேறுதான். வ்யாஸாசலீயத்தில் முன் 27 ச்லோகங்களும் பின் 5 ச்லோகங்களும் ஸுஷமாகாரர் கூறுகிறபடிஇருக்கின்றனவே. அச்சுப் போட்டவர்கள் சரியான பிரதி கிடைக்காததால் 27-5 இரு எண்ணிக்கையுள்ள ச்லோகங்களையும் அச்சுப் போடாமல் விட்டுவிட்டார்கள். மாதவீயகாரர் வ்யாஸாசலீயத்திலுள்ள ச்லோகங்களை அநுவதிக்கும் வழக்கமுள்ளவராக இருந்தும் முன் 27 ச்லோகங்கள் தமக்குத் தேவையுள்ளவையாக இருப்பதனால் அநுவதித்தார். பின் 5 ச்லோகங்கள் தமக்குத் தேவையில்லாமலும் தாம் கூறும் 'ஆசார்யர் கேதாரத்தில் ஸித்தியடைந்தார்கள்' என்ற கதாபாகத்துக்கு விரோதமாக இருப்பதாலும் விட்டுவிட்டார். மாதவீயகாரரே தமக்கு மூலமாயுள்ள பதஞ்சலி சரித காவ்யம், சங்கராப்யுதய காவ்யம், இரண்டிலும் உள்ள ஆசார்யர் கடைசிக் காலத்தில் காஞ்சியிலேயே தங்கினர் என்ற கதையைத் தமக்கு விரோதமாக இருப்பதால் விட்டுவிட்டார். அதுபோலவே தமக்கு மூலமான வ்யாஸாசலீயத்திலுள்ள மேற்படி 5 ச்லோகங்களையும் தமது இஷ்டமான கதைக்கு விரோதமானபடியாலேயே விட்டுவிட்டார் என்ற இந்த உண்மையை விமர்சகர் நன்கு உணர்வாராக.

மேற்கூறிய 5 ச்லோகங்களில் முதல் ச்லோகம் ஸ்வல்ப மாறுதலுடன் மாதவீயத்திலும், அச்சுப் போட்ட வ்யாஸாசலீயத்திலும் காணப்படுகிறது.

மாதவீயத்தில்—

"इत्थं निरुत्तरपदां स विधाय देवीं
सर्वज्ञपीठमधिरुह्य ननन्द सभ्यः ।

सम्मानितोऽभवदसौ विबुधैश्च वाण्या गार्ग्या
कहोलमुखैरिव याज्ञवल्क्यः" ॥ (16-87)

என்றும், அச்சுப் போட்ட வ்யாஸாசலீயத்தில்,

एवं निरुत्तरपदां स विधाय देवीं
सर्वज्ञपीठमधिरुह्य ननन्द सभ्यः।
मात्रा गिरामपि तथा पुरुषैश्च सभ्यैः
सम्मानितो रुचितदेशमयं जगाम ॥ (12-82)

என்றும் பாடம் காணப்படுகிறது. இந்த ச்லோகம் ஆசார்யர் காச்மீரத்தில் ஸர்வக்ஞபீடாரோஹணம் செய்த வரலாற்றைக் கூறுகிறது. காச்மீரம் என்பது காஞ்சிதான் என்று முன்பே (மலர் 1, இதழ் 7-இல்) கூறிவிட்டோம். ஆசார்யர் ஸர்வக்ஞபீடம் ஏறும்பொழுது பல வாதிகள் பல கேள்விகளைக் கேட்க எல்லாவற்றுக்கும் ஆசார்யர் பதில் கூறினார்கள். பிறகு ஸரஸ்வதிதேவி அசரீர வாக்கினால் ஆசார்யரைத் தடுத்துப் பல சாஸ்திரங்களில் கேள்விகளைக் கேட்டாள். ஆசார்யர் அவற்றுக்குப் பதில் கூறினார்கள். பிறகு காம சாஸ்த்ர ஸம்பந்தமுள்ள கேள்விகளை ஸரஸ்வதி கேட்க, ஸரஸ்வதியினிடம் ஏழு தினங்கள் கழித்துப் பதில் கூறுவதாகக் கூறிவிட்டு, ஆசார்யர் பரகாயப்ரவேசம் என்கிற யோக ஸித்தியினால் மரித்த ஓர் ராஜ சரீரத்தில் பிரவேசித்து அவனுடைய பத்தினிகளின் முகமாய்க்காம சாஸ்த்ர ஸம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொண்டு, பிறகு தமது சரீரத்தில் ப்ரவேசித்து, ஸரஸ்வதியின் கேள்விகளுக்குப் பதில் கூறிவிட்டார். பிறகும் ஆசார்யர்

ஸ்திரீ ஸம்பந்தத்தால் அசுத்தர்களாய் விட்டபடியால் ஸர்வக்ஞ பீடமேறுவது உசிதமில்லை என்று ஸரஸ்வதிதேவி தடுக்க, 'நான் வேறு சரீரத்தில்தான் ஸ்திரீகளின் ஸம்பந்தத்தை அடைந்தேன்; இந்தச் சரீரத்திலன்று. ஆகையால் இந்தச் சரீரம் சுத்தமே' என்று ஸரஸ்வதிக்குப் பதில் கூறி ஆசார்யர் ஸர்வக்ஞபீடம் ஏறினதாகக் கதை வ்யாஸாசலீயத்தில் கூறப்படுகிறது.

மாதவீயத்தில் காமசாஸ்த்ர ஸம்பந்தமுள்ள கேள்விகளை மண்டனமிச்ரரின் பத்தினியான உபயபாரதி கேட்டதாக முன் கதை கூறிவிட்டபடியால் இந்த இடத்தில் ஸ்த்ரீ ஸம்பந்தத்தால் அசுத்தமான சரீரத்தால் ஸர்வஜ்ஞபீடம் ஏறுவது உசிதமில்லை என்று மாத்திரம் ஸரஸ்வதி கேட்டதாயும் அதற்கு ஆசார்யர் தமது சொந்த சரீரத்தால் ஸ்த்ரீ ஸம்பந்தத்தை அநுபவிக்கவில்லை, ஆகையால் இந்தச் சரீரம் சுத்தமென்று பதில் கூறி, ஸர்வஜ்ஞபீடம் ஏறினதாயும் கதை கூறப்பட்டிருக்கிறது.

மாதவீயத்தில், ஆசார்யர் பிறகு பதரீகேதாரம் போனதாகவும் அங்கு ஸித்தி அடைந்ததாயும் கதை கூற விரும்பியதால், 'ஆசார்யர் ஸர்வஜ்ஞபீடம் ஏறிவிட்டு ஸந்தோஷத்தை அடைந்தார். அப்பொழுது அங்குள்ள ஸபையில் இருந்த பண்டிதர்களாலும் ஸரஸ்வதியினுலும் கொண்டாடப்பட்டார். யாஜ்ஞவல்க்யர் ஜனகஸபையில், கார்கி என்பவளாலும் கஹோளர் முதலியவர்களாலும் துதிக்கப்பட்டது போல்' என்று சொல்லிக் கதை முடிக்கப்பட்டிருக்கிறது.

அச்சுப்போட்ட வ்யாஸாசலீய பாடத்தில், 'ஆசார்யர் ஸர்வஜ்ஞபீடம் ஏறின பிறகு ஸரஸ்வதியாலும் அங்கு

ஸபையிலுள்ள பண்டிதர்களாலும் கௌரவிக்கப்பட்டு ஸந்தோஷப்பட்டார். பிறகு தமக்கு இஷ்டமான தேசம் போய்விட்டார்' என்று சங்கர சரித்திரக் கதை முடிக்கப் பட்டுப் பிறகு, ஆறு ச்லோகங்களால் சங்கரரின் பெருமையும் 12-ஆம் ஸர்க்கத்தில் கூறப்பட்ட கதாஸங்க்ரஹமும் கூறிப் புஸ்தகம் முடிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் **'एवं निरुत्तरपदां स विधाय देवीं सर्वज्ञ-पीठमधिरुह्य'** என்ற பாகம் வரையில் மாதவீயம், அச்சிடப் பட்ட வ்யாஸாசலீய பாடம், ஸுஷமாகாரர் அநுவதிக்கும் வ்யாஸாசலீய பாடம் மூன்றிலும் வித்தியாசமில்லை. மாதவீயத்தில் மாத்திரம் **एवम्** என்பதற்குப் பதில் **इत्थम्** என்று மாற்றப்பட்டிருக்கிறது. அதில் அர்த்தம் மாறவில்லை. பிறகு **'संमानितोऽभवदसौ विबुधैश्च वाण्या'** என்று மாதவீயத்திலும், **'मात्रा गिरामपि तथा पुरुषैश्च सभ्यैस्संभावितः'** என்று அச்சுப்போட்ட வ்யாஸாசலீய பாடத்திலும், **'मात्रा गिरामपि तथोपगतैश्च मिश्रैस्संभावितः'** என்று ஸுஷமாகாரர் அநுவதிக்கும் வ்யாஸாசலீய பாடத்திலும், பாடம் இருப்பதில், ஆசார்யர் ஸரஸ்வதியினுலும் ஸபையிலுள்ள பண்டிதர்களாலும் பஹுமானிக்கப்பட்டார் என்ற அர்த்தத்தில் மாறுதலில்லை.

மாதவீயகாரருக்கு 'ஆசார்யர் பதரீகேதாரம் போய் அங்கிருந்தபடியே கைலாசத்துக்குப் போனுர்' என்று கதை கூற இஷ்டமானபடியால், அவர் வ்யாஸாசலீயத்தையே அநுவதிக்கிறவராகத்தான் இருந்தாலும் தமக்கு இஷ்டமான கதைக்கு அநுகுணமாகப் பூர்வார்த்தத்தில், **'ननन्द सभ्यः'** என்றும், உத்தரார்த்தத்தில், **'गार्ग्यी कहोलमुखरैरिव याज्ञव-**

ஸ்ய:' என்றும் பாடத்தை மாற்றி ஆசார்யர் ஸபையிலிருந்து கொண்டு ஸந்தோஷப்பட்டார்; யாஜ்ஞவல்க்யர் ஜனகஸதஸ்ஸில் கார்கியாலும் கஹோளர் முதலியோராலும் கொண்டாடப்பட்டதுபோல் கொண்டாடப்பட்டார் என்ற அர்த்தத்தைக் கூறி ச்லோகத்தைப் பூர்த்தி செய்துவிட்டார்.

மாதவீயகாரர் தமது இஷ்டம் போல் பாடத்தை மாற்றிவிட்டாரே தவிர, வ்யாஸாசலீய பாடம் அவ்விதம் இல்லை. அச்சுப்போட்டபடிக்கோ ஸுஷமாகாரர் அநுவதிக்கிறபடியேதான் வ்யாஸாசலீய பாடம். அதில் அச்சுப்போட்ட பாடத்தில் உள்ளபடி '**ननन्द सभ्यः**' 'ஸபையில் ஆசார்யர் இருந்துகொண்டு ஸந்தோஷப்பட்டார்' என்று சொல்லுவது ஹர்ஷவிஷாதரஹிதரான ஆசார்யருக்குப் பெருமையை அளிக்காது. '**अध्युष्य सर्वज्ञपीठं निजमतगुरुतायै नो पुनर्मानहेतोः**' (16-93) என்ற ச்லோகத்தில் மாதவீயகாரரே ஆசார்யர் ஸர்வஜ்ஞபீடம் ஏறியது தம்மைப் பிறர் கௌரவிப்பதற்காகவன்று என்று சொல்வதால், ஆசார்யர் ஸந்தோஷத்தை அடைந்தார் என்று கூறுவது யுக்தமில்லை. '**रुचितदेशमयं जगाम**' என்று அச்சுப்போட்ட வ்யாஸாசலீய பாடப்படி 'ஆசார்யர் தமக்கு இஷ்டமான தேசம் போய்விட்டார்' என்று கூறுவதும் அழகில்லை. எங்கே கடைசியில் ஆசார்யர் போனார் என்று கூற வேண்டாமா? இஷ்டம் அனிஷ்டம் இரண்டுமற்ற ஆசார்யருக்கு எது இஷ்டமான தேசம் என்று எப்படிக் கூறுவது? ஆகையால் பூர்வார்த்தத்தில், '**मठे स्वक्लृप्ते**' என்றும், உத்தரார்த்தத்தில் '**कञ्चित् कालमुवास काञ्च्याम्**' என்றும் ஸுஷமாகாரர் அநுவதிக்கிற பாடமே வ்யாஸாசலீயத்தின் உண்மையான பாடம்.

ஆசார்யர் ஸர்வஜ்ஞபீடம் ஏறின பிறகு ஸரஸ்வதியினு லும் வித்வான்களாலும் கொண்டாடப்பட்டார். பிறகு காஞ்சியில் தமது மடத்தில் கொஞ்சகாலம் வஸித்தார் என்பது அதன் பொருள். 'तथा पुरुषैश्च सभ्यैः' என்று அச்சுப்போட்ட வ்யாஸாசலீய பாடத்தைவிட 'तथोपगतैश्च मिश्रैः' என்ற ஸுஷமாகாரர் அநுவதிக்கிற பாடமே, 'तान्वै विजित्य तरसाक्षतशास्त्रवादैर्मिश्रान्' என்று மிச்ரர்களை ஜயித்த தாகக் கூறும் சிவரஹஸ்ய பாடத்துக்கு ஒத்துவருவதால் ச்லாக்யமானது. 'मठे स्वक्लृप्ते' என்ற வ்யாஸாசலீய பாடமே 'स्वकाश्रमे' என்ற சிவரஹஸ்யவசனத்துக்கு ஒத்துவருகிறது. தமது மடத்தில், தமது ஆச்ரமத்தில் என்று அதற்குப் பொருள். 'काञ्चीपुरे स्थितिमवाप स शंकरार्यः' என்ற பதஞ்சலி சரித வாக்கியத்துக்கு, 'कमपि कालमुवास काञ्च्याम्' என்ற வ்யாஸாசலீய பாடம் ஒத்திருக்கிறது. ஆகையால் ஸுஷமாகாரர் அநுவதிக்கிற முதல் ச்லோக பாடமே வ்யாஸாசலருக்கு ஸம்மதமானது; அச்சுப் போடப்பட்ட பாடம் ஸம்மதமன்று. அதை மேல்குறிப்பிட்டபடி காஞ்சி மடத்தை ஒப்புக்கொள்ள இஷ்டமில்லாத சிலர் மாற்றி விட்டார்கள் என்று நிச்சயமாகக் கூறலாம்.

ஸுஷமாகாரர் அநுவதிக்கும் ஐந்து சுலோகங்களுள் இரண்டாவது ச்லோகத்தில், 'ஆசார்யர் காஞ்சியில் தமது காமகோடி பீடத்தில் ஸுரேச்வராசார்யருடைய பாது காப்பில் ஸர்வஜ்ஞாத்மா என்ற சிஷ்யரை ஸ்தாபித்தார்' என்ற வரலாறு கூறப்படுகிறது. மூன்றுவது ச்லோகத்தில், 'அத்வைத தத்துவத்தை உலகில் பிரசாரம் செய்து க்ருத க்ருத்யர்களாக ஆன ஆசார்யபாதர் காஞ்சியிலேயே ஸித்தி அடைந்தார்கள்' என்று கூறப்படுகிறது. இது 'स काञ्च्यामथ

सिद्धिमाप' என்ற சிவரஹஸ்ய வசனம் முதலியவற்றுக்கு ஒத்துவருவதால் யுக்தமானதே. நான்காவது ச்லோகத்தில், 'காஞ்சியில் ஆசார்யர் என்ற கல்பவ்ருக்ஷம் நன்கு வேரூன்றி நான்கு சிஷ்யர்களாகிய ஸ்கந்தங்களால் அதாவது பெருங் கிளைகளால் உலகத்தில் எங்கும் வ்யாபித்து ஸாம்ஸாரிகமான தாபத்தைப் போக்கிக்கொண்டு இருக்கிறது. அந்த வ்ருக்ஷத் தைப் பல அதிகாரிகளாகிய பக்ஷிகள் ஆச்ரயித்துக்கொண்டு அம்ருதமாகிய பழத்தைப் புசிக்கின்றன' என்ற பொருள் கூறப்படுகிறது. ஐந்தாவது ச்லோகத்தில், வ்யாஸாசல கவியின் காலத்தில் காஞ்சி காமகோடி பீடத்தில் இருந்த விபுலானந்தர் என்ற ஆசார்யரின் மஹிமை கூறப்படுகிறது.

இந்த விபுலானந்தர் என்பவர் காஞ்சீ காமகோடி பீடத்தில், 53-ஆவது பீடாதிபதியாக இருந்தவர். சங்கரானந் தரின் சிஷ்யர். இவரை ஸதாசிவப்ரஹ்மேந்த்ரர் குருரத்ன மாலையில் கூறுகிறார்—

निजनीवृदवग्रहेतिखेदत्यजनेपालनृपालपूज्यपादः ।
स पुरो मम साधु संनिधत्तां विपुलानन्दसदाशिवोऽप्रमत्तः
॥ 81 ॥

காஞ்சீ காமகோடி பீடத்தில், 56-ஆவது பீடாதிபதியாக இருந்தவரும் காஞ்சீ காமகோடி பீடத்தின் குரு பரம்பரை யிலுள்ள ஒவ்வொரு குருவின் பெயர் ஊர் ஸித்தி அடைந்த நாள் ஆகியவற்றைக் கூறும் 'புண்ய ச்லோக மஞ்ஜரி' என்ற க்ரந்த கர்த்தாவுமான ஸர்வஜ்ஞ ஸதாசிவ போதேந்த்ரர் என்னும் ஆசார்யர் இயற்றிய புண்ய ச்லோக மஞ்ஜரியில் விபுலானந்தரைப் பற்றிய சுலோகங்கள் வருமாறு—

नागारण्यगनागनाथतनुजः प्राप्ताश्रमश्शाङ्करा-
नन्दादेष सदाशिवेन्द्रनियमी नेपालभूपार्चितः ।
पूर्णानन्दपदेन यो भुवि पुनन् सर्वांश्च सानुग्रहं
श्रीकाञ्च्यामधिकामपीठमवसत् सैकामशीतिं समाः ॥ 105 ॥

पिङ्गले मङ्गलालोकः ज्येष्ठे ज्येष्ठश्शुचिश्शुचौ ।
दशम्यां दशमीमार्छद्दशां धाम्न्यपुनर्भवे ॥ 106 ॥

இந்த விபுலானந்தரின் சிஷ்யரான வ்யாஸாசலர், 54-ஆவது பீடாதிபதியாக இருந்த வ்யாஸாசல மஹாதேவேந்த்ரர் என்பவராவார். இவரை குருரத்னமாலையில்,

बहुधाऽऽहितसूत्रभाष्यशान्तिः बहुलामोदयुतस्समग्रशान्तिः ।
शमलं समुदस्य शं ममालं स महादेवगुरुर्दिशेत् सलीलम् ॥ (82)

என்று கூறியிருக்கிறது. புண்ய ச்லோக மஞ்சரியில்—

काञ्चीकामेश्वरार्यात् समजनि कमलाम्बोदरात् कुप्पनाख्यो
यः पूर्णानन्दयोगिप्रवरपदरतेः प्राप पीठीमसुष्य ।
भाष्यं त्रिस्सप्तकृत्वश्चटुलमचकलद्यो नयाब्दयां प्रहृष्यन्
अक्षय्याषाढकृष्णप्रतिपदि स महादेवनामाऽऽप सिद्धिम् ॥ (107)

என்றும் கூறியிருக்கிறது. புண்ய ச்லோக மஞ்ஜரியின் சிறு வ்ருத்தியிலுள்ள வாக்கியம் வருமாறு விளக்கம் செய்திருக்கிறது—

'अयमेव अनवरताध्युषितव्यासाचलतया व्यासाचल इत्यपि प्रसिद्धः ।
व्यासाचलीयादिप्रबन्धकृत् प्राप सिद्धिमधिव्यासाचलम् ।'

மேற்காட்டிய 5 ச்லோகங்களுள் முதல் ச்லோகத்தில் பாடபேதம் செய்தும், பாக்கி 4 ச்லோகங்களை எடுத்து விட்டும் வ்யாஸாசலீய புஸ்தகத்தை, முன்கூறிய சிலர் சிவரஹஸ்யத்தையும் ஆனந்தகிரீயத்தையும் பரிஷ்கரித்தது போல் கூடமாகப் பரிஷ்கரித்திருக்கிறார்கள். இந்த உண்மை ஸூஷமாகாரரின் அநுவாதத்தினால் வெளியாயிற்று. சிலர் பரிஷ்கரித்து எழுதிய ப்ரதியே அச்சுப்போடுவதற்கு உதவிய தால், அந்த நான்கு ச்லோகங்களும், முதல் ச்லோகத்தின் உண்மையான பாடம் அச்சுப்போட்ட வ்யாஸாசலீய புஸ்தகத்தில் காணப்படவில்லை. இந்த விஷயங்கள் அச்சுப் போட்ட வ்யாஸாசலீய புஸ்தகத்தின் முகவுரையில் தனியாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. வ்யாஸாசலீய அச்சுப் புஸ்தகத் தில் முன்கூறிய 27 ச்லோகங்கள் விடுபட்டது போலவே இந்த ச்லோகங்களும் விடுபட்டிருக்கின்றன.

இவ்விதம் உண்மை இருக்க, விமர்சகர் இந்த ஐந்து ச்லோகங்களைப்பற்றித் தமது அத்புதமான விமர்சன சைலி யைக் காட்டியிருக்கிறார். அது வருமாறு—'एवं निरुत्तरपदाम्' என்ற ச்லோகத்தில் இவ்விதம் நிறுத்தியிருப்பது காஞ்சியில் ஆசார்யரால் ஒரு மடம் நிர்மாணம் செய்ததுபோலவும், அதில் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்ததுபோலவும், காஞ்சியில் அவர் கொஞ்ச காலம் இருந்தாற்போலவும் ஏற்படுவதற்காக என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இவரே ஒரு மடம் கட்டிக்கொண்டு அதில் ஸர்வஜ்ஞபீடா ரோஹணம் என்றால் அர்த்தம் தெரியவில்லை. அதற்கு என்ன மதிப்புண்டு? இந்தத் திருத்தம் வெறும் அஸம்பா விதம் என்பது இந்த வ்யாஸாசலீயத்திலிருந்தே தெரிகிறது. அதே ஸர்க்கத்தில் 30-31-ஆவது ச்லோகங்களில் ஸர்வஜ்ஞ

பீடம் என்பது காச்மீரத்தில் என்று வ்யக்தமாகக் கண்டிருக்கையில் காஞ்சீபுரத்தில் ஸர்வஜ்ஞபீடத்திற்கு ப்ரஸக்தியே இல்லை. 'काश्मीराख्यं मण्डलम्' என்பது முதலிய இரு ச்லோகங்கள் மாதவீயத்தில் ஸர்க்கம் 16-இல் 55–56 என்ற எண்ணிக்கையில் இருக்கின்றன. ஆகையால் மாதவீயத்திலிருந்து எடுத்தது போதாமல் திருத்தலும் ஆத்மபோதேந்த்ரருக்கு அவச்யமிருந்ததென்று தெரிகிறது. இதுவும் போதாதென்று நினைத்து இந்த வ்யாஸாசலீயத்தி இல்லாத நான்கு ச்லோகங்களை அதில் இருப்பதாக உதாஹரிக்கிறார். அந்த நுழைக்கப் பார்க்கிற ச்லோகங்களில்தான் ஸர்வஜ்ஞாத்மாவை நியமித்ததும், ஸுரேச்வரரை மேற்பார்வையாளராகச் செய்ததும், ஸ்ரீமத் ஆசார்யருடைய ஸித்தியும், எவருடைய ஆஜ்ஞையை நேபாளம் முதலிய நாட்டு அரசர்கள் தலையால் தாங்குகிறார்களோ அப்பேர்ப்பட்ட ஜகத்குரு விபுலானந்தரின் ஸ்துதியும் காணப்படுகின்றன. இந்த ச்லோகங்கள் பாதொன்றும் இப்பொழுது அச்சிட்டிருக்கும் புஸ்தகத்தில் காணவே இல்லை. கவனம் செய்வதற்குவேண்டிய யோக்யதையுள்ளவர்கள் புத்தியைத் துர்வினியோகம் செய்து இவ்விதம் ச்லோகங்களைக் கல்பித்துக் கொடுப்பது மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது'' என்று.

அதற்கு இது பதில்—காஞ்சீபுரத்தில் ஆசார்யருக்கு ஸ்ரீமடம் இருப்பது சிவரஹஸ்யத்திலும் ஆனந்தகிரீய சங்கரவிஜயத்திலும் கூறப்பட்டிருப்பதை விமர்சகர் மறைக்க முடியாது. இது விஷயம் முன்பே கூறிவிட்டோம். காஞ்சியில் ஸர்வஜ்ஞபீடம் உள்ள விஷயம் விமர்சகருக்கும் இஷ்டமான சித்விலாஸீய சங்கரவிஜயத்திலும், கோவிந்த

நாதீய சங்கர சரித்ரத்திலும், சங்கராப்யுதயத்திலும் கூறியிருக்கிறது. வ்யாஸாசலீயத்தில், 12-ஆம் ஸர்க்கம் 30-31-ஆம் ச்லோகங்களில் கூறப்பட்ட ஸர்வஜ்ஞபீடத்துடன் கூடிய காச்மீர மண்டலம் என்பது காஞ்சீபுரமே என்று வ்யாஸாசலீயத்தின் வ்யாக்யானம்போல் வ்யாஸாசலீயத்தை விளக்கும் கோவிந்தநாதீயத்தின் வசனத்தை ப்ரமாணமாகக் காட்டி முன்பே மலர் 1, இதழ் 7-இல் 'பகவத்பாதரும் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீமடங்களும்' என்ற வ்யாஸத்தில் கூறிவிட்டோம். வ்யாஸாசலீயத்தில் இருக்கும் ச்லோகங்களையே அநுவதித்து எழுதப்பட்ட மாதவீயத்திலுள்ள 16-ஆம் ஸர்க்கம், 55-56-ஆம் ச்லோகங்களுக்கும் அதே கருத்து என்றும் கூறிவிட்டோம்.

ஸர்வஜ்ஞபீடம் காஞ்சியில் ஆசார்யரின் மடத்தில் இருப்பதாக ஒருவரும் சொல்லவில்லை. அப்படிச் சொன்னதாக விமர்சகர் ப்ரமித்துவிட்டு, 'தமது மடத்தில் ஸர்வஜ்ஞபீடம் ஏறினல் அதற்கு மதிப்புண்டா?' என்று கேள்வி போட்டுவிட்டார். ஸுஷமாகாரர் அநுவதிக்கும் ச்லோகத்தில், '**मठे स्वक्लृप्ते सर्वज्ञपीठमधिरुह्य**' என்று விமர்சகர் அன்வயம் பண்ணிக்கொண்டு சோத்யம் செய்கிறுர். '**मठे स्वक्लृप्ते कमपि कालमुवास काञ्च्याम्**' என்று விமர்சகர் அன்வயம் பண்ணிக்கொண்டு சாந்தியை அடைவாராக. ஆசார்யர் தமது மடத்தில் காஞ்சியில் கொஞ்ச காலம் வாஸம் செய்தார் என்றுதான் கூறுகிறதே தவிர தமது மடத்தில் ஸர்வஜ்ஞபீடம் ஏறினதாகக் கூறவில்லை.

'**एवं निरुत्तरपदाम्**' என்ற ச்லோகத்தை மாதவீயத்திலிருந்து எடுத்தது போதாமல் திருத்தலும் ஆத்மபோதேந்த்ரருக்கு அவச்யமாயிருந்ததென்று தெரிகிறது என்று

விமர்சகர் சொல்லுகிறார். மாதவீயகாரர் தாம் வ்யாஸாசலீயத்திலிருந்து எடுத்திருக்கிறார் என்று எவ்வளவு தரம் சொன்னாலும் விமர்சகருக்குப் புரியாதது ஆச்சரியம். மாதவீயகாரரே 'நான் வ்யாஸாசலீயத்திலிருந்து எடுத்திருக்கிறேன்' என்று சொல்லுகிறாரே. அவர் வார்த்தை கூடவா விமர்சகருக்கு நம்பிக்கையை உண்டு பண்ணவில்லை? ஸுஷமாகாரர் கூறிய பாடமே வ்யாஸாசலீய ச்லோகத்துக்கு யுக்தமானது, அச்சுப்போட்ட பாடம் யுக்தமன்று என்று முன்பே கூறிவிட்டோம். பாக்கி 4 ச்லோகங்கள் சிலரின் வேலையால் வ்யாஸாசலீயத்தின் ப்ரதிகளில் விடப்பட்டிருக்கிறது என்பதை அந்த இனத்தைச் சேர்ந்த விமர்சகர் வெளியில் ஒப்புக்கொள்வாரா?

அச்சுப்போட்ட வ்யாஸாசலீயம் 12-ஆம் ஸர்க்கத்திலுள்ள,

एकश्शाखी शङ्कराख्यश्चतुर्धा स्थानं भेजे तापशान्त्यै जनानाम् ।
शिष्यैस्स्कन्धैश्शिष्यशाखैर्महद्भिर्ज्ञानं पुष्पं यत्र मोक्षप्रसूतिः ॥ (83)

என்ற ச்லோகத்திலும் ஸுஷமாகாரர் வியாஸாசலீயத்திலிருப்பதாக அநுவதித்த முன்கூறிய 5 ச்லோகங்களுள் நான்காவதான **'गामाक्रम्य पदेऽधिकाञ्चि'** என்ற ச்லோகத்திலும், சங்கராசார்யராகிய ஒரே கல்பவ்ருக்ஷமானது காஞ்சிபுரத்துப் பூமியில் வேரூன்றி, கணக்கற்ற ப்ரசிஷ்யர்களாகிய பல கிளைகளையுடைய நான்கு சிஷ்யர்களாகிய பெரிய ஸ்கந்தங்களினால் பூமிமுழுவதும் வ்யாபித்து, ஜனங்களின் சம்சாரதாபத்தைப் போக்கிக்கொண்டு விளங்குகிறது. அந்தக் கல்பவ்ருக்ஷத்தின் புஷ்பம் ஞானம். மோக்ஷமே

பழம் என்ற கருத்தை ப்ராசீனரான வ்யாஸாசல கவி விளக்குவதால் அதன் மூலமாகக் காஞ்சியில் ஆசார்யர் தமது ப்ரதான மடத்தையும் தமது நான்கு சிஷ்யர்கள் அவர்களுடைய சிஷ்யர்களாகிய பல ப்ரசிஷ்யர்கள் இவர்களின் வெவ்வேறு மடங்களையும் வ்யாஸாசலகவி ஸூசிக்கிறபடியால், ப்ரதானமான காஞ்சீமடத்தை ஆக்ஷேபிப்பவர்கள், வ்யாஸாசலர், அவரது கருத்தை ஆதரிக்கும் மாதவீயகாரர் முதலியோர் எல்லாருக்குமே விரோதிகளாவர் என்று விவேசகர்கள் அறியவும். காஞ்சியில் ஆசார்யர் வஸித்ததாகப் பதஞ்சலி சரிதம், சங்கராப்யுதயம் முதலியவற்றில் கூறியிருப்பது இக்கருத்தை வலியுறுத்துகிறது. சங்கர பகவத்பாதர்களுடைய சிஷ்யப்ரசிஷ்ய மடங்கள் கணக்கற்றவை. எந்த மடத்தையும் இல்லையென்று சொல்வது ப்ரமாணவிருத்தமாகும். அப்படி இருக்க, ஆசார்யர் வஸித்த ப்ரதான மடத்தையே இல்லையென்று ஸாதித்துவிடலாம் என்று மனோரதம் செய்வது, மூலத்தைப் பங்கம் செய்தால் கிளை முதலிய எல்லாம் பங்கத்தை அடைந்துவிடுமே என்று யோசிக்காத அவசரக்காரனுடைய அவிவேகச் செயல் என்று அறியவும். ஆகையால் சிவரஹஸ்யம், பதஞ்சலி சரிதம், சங்கராப்யுதயம், வ்யாஸாசலீயம், கோவிந்தநாதீயம், ஆனந்தகிரீயம் முதலிய எல்லா க்ரந்தங்களிலும் கூறப்பட்ட ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தை இல்லையென்று கூற ப்ரவ்ருத்திப்பதாகிய ஸாஹஸகார்யத்தைச் செய்யாமல் ப்ரமாணசரணர்களாய் விவேகிகள் ஒப்புக்கொள்வதே யுக்தமானது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சுபம்

விலை : 30 ந. பை.

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம் வெளியீடு
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை - 1